**தேவகோட்டை நகராட்சி.**

**<u>சாதாரணக்கூட்டம்.</u>**

தேவகோட்டை நகராட்சியில் நகர்மன்ற கூட்டம் **16.03.2022–ம்** தேதி புதன்கிழமை காலை **11.00** மணிக்கு சாதாரணக்கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழ்க்கண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

(ஒப்பம்)கா.சுந்தரலிங்கம்
**நகர்மன்ற தலைவர்,**
**தேவகோட்டை நகர்மன்றம்.**

**தேவகோட்டை நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் பிரேரணைகள்.**

1) தேவகோட்டை நகர் முழுவதும் பொதுமக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் பங்களிப்புடன் காவல்துறை ஆலோசனை பெற்று கண்காணிப்பு கேமரா பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
2) 6–வது வார்டு நகராட்சி உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.
3) தேவகோட்டை அரசு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டிடம் கட்டி நவீனமயமாக்கப்பட்டு இரத்த வங்கி கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும்.
4) அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
5) பட்டதாரி இளைஞர்கள் ஆன்லைன் கல்வி கற்பதற்கு ஏதுவாக நகராட்சி சார்பில் முக்கிய இடங்களில் இலவச வைஃபை திட்டம் செயல்படுத்துப்படும்.
6) நகரில் உள்ள அனைத்து மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு அரசு மானியத்துடன் கூடிய சுழல் முறை வங்கி கடன் வசதி ஏற்படுத்தித் தரப்படும்.

**<u>தீர்மானம்</u>: அரசுக்கு பரிந்துரை செய்து நடவடிக்கை மேற்கொள்ளலாம்**

**<u>பொருள்: 1</u>**

மாண்புமிகு நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு அவர்களால் **2021–2022–ம்** ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத் தொடரில் **24.08.2021–ம்** தேதியில் நகராட்சிகளில் உள்ள தெரு மின்விளக்குகளை ஒளி உமிழ்வு டையோடு விளக்குகளாக (Light Emission Diode Lamps) மாற்றப்படும் என அறிவித்ததைத் தொடர்ந்து தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெரு மின்விளக்குகளை ஒளி உமிழ்வு டையோடு விளக்குகளாக (Light Emission Diode Lamps) மாற்றுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து சமர்ப்பித்திட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்:35871/2014/E1 நாள்:**08.09.2021–**ன்படி தெரிவிக்கப்பட்டு வரப்பெற்றுள்ள கடிதம் மன்றத்தின் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அதன்படி தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் மின் சேமிப்பு நிறுவனம் (ESCO) பரிந்துரை செய்த குறிப்பிட்ட திறன் கொண்ட (Watts) ஒளி உமிழ்வு

டையோடு விளக்குகளாக மாற்றுவதற்கு பணி தேர்வு செய்யப்பட்டு, மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பணியின் விபரம்:–

| Sl.No. | Name of the Works | No. of Work | Estimate Rs. in Lakhs |
|---|---|---|---|
| 1 | Conversion of all kinds of street light into energy efficient LED Light at Devakottai Municipality. | 1 | 275.80 |

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம். மேற்படி நிதியினை ஏதேனும் ஒரு திட்டத்தில் முழுமையாக வழங்கவும் கோரலாம்.
2. அவசர அவசியம் கருதியும் பொதுமக்களின் நலன் கருதியும் மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பிரேரணை சமர்ப்பித்து நடவடிக்கை தொடரலாம்.
3. மேற்படி தேர்வு செய்யப்பட்டுள்ள பணியினை பரிந்துரை செய்து மேலனுப்பி வைத்திட மாவட்ட ஆட்சித்தலைவர் சிவகங்கை அவர்களுக்கு திட்ட மதிப்பீடு சமர்ப்பித்து நடவடிக்கை தொடரலாம்.
4. விரிவான திட்ட மதிப்பீடு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பித்து நிர்வாக அனுமதி பெற்றிட மேல் நடவடிக்கை தொடரலாம்.

(ந.எ.ண்:4863/2021/இ1)

## தீர்மானம்: மன்றம் அனுமதிக்கப்பட்டது

## பொருள்:–2

தேவகோட்டை நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவின் கீழ் நகர்மன்றத் தலைவர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் பொதுசுகாதாரத்துறை மேம்படுத்தும் வகையிலும் முட்புதர்கள், செடிகள் மற்றும் மழைநீர் கால்வாய்களை சுத்தப்படுத்தவும், 9 வார்டுகளுக்கு ஒரு JCB என்ற வகையில் 27 வார்டுகளுக்கும் 3 JCB இயந்திரங்கள் வாடகைக்கு அமர்த்தி 10 நாட்களுக்கு பணி மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.3,00,000/–ம் ஆகும் எனவும் 08.03.2020–ந் தேதி துப்புரவு ஆய்வாளர் அவர்கள் குறிப்பில் தெரிவித்துள்ளார். அதன்படி மேற்படி பணியினை பொதுசுகாதார அவசர அவசியம் கருதி பணி மேல்நடவடிக்கை தொடர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) செலவீனத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:0281/2022/H1)

## தீர்மானம்: பொருள் 2 அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள்:– 3</u>**

தேவகோட்டை நகராட்சிக்கு உட்பட்ட பகுதியான புதிய வார்டு எண்–27, காந்தி ரோடு பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான 6–வது தொகுதி நகராட்சி உயர்நிலைப்பள்ளி இயங்கி வருகின்றது. மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப கூடுதல் வகுப்பறை கட்டிடம் தேவைப்படுவதால் இப்பள்ளி வளாகத்தில் உள்ள பழைய வகுப்பறை கட்டிடத்தினை ஆய்வு செய்ததில் அக்கட்டிடத்தின் மேற்புறத்தில் தட்டு ஓடுகள் பெயர்ந்தும் மேற்கூரை இடிந்தும் சிதிலமடைந்தும் காணப்படுகின்றது. எனவே பள்ளி மாணவர்களின் நலன்கருதி மேற்காணும் கட்டிடத்தில் மராமத்து பணி மேற்கொண்டு இயக்கத்தில் கொண்டு வருதல் அவசியமாகிறது. எனவே 6–வது தொகுதி நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் உள்ள பழைய வகுப்பறை கட்டிடத்தில் மராமத்து பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.9,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்:3877/2022/இ1)

**<u>தீர்மானம்</u>: பொருள் 3 அனுமதிக்கப்பட்டது**

(ஒப்பம்)கா.சுந்தரலிங்கம்
**நகர்மன்ற தலைவர்,**
**தேவகோட்டை நகராட்சி.**